**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 34/2023**

**Date : 16.04.2026**

**பி. வா.சா1- இராமசுவாமி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் வட்டாட்சியரிடம் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக சமர்ப்பித்த மனு வாசாஆ 12 நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை அனுகவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாசாஆ 12 ல் கடைசி பத்தியில் வட்டாட்சியர் மேற்படி மனுவை நிராகரித்து வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தை அனுகுமாறு சொன்னார்.

நான் வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு வாசாஆ 13 என்றால் சரிதான். வாசாஆ 13 மனுவில் எதிர்மனுதாரர் எனது பாட்டி ராமு நாடாச்சி திடீரென்று காணாமல் போய்விட்டார் என்று குறிப்பிட்டுள்ளார் எனது பாட்டி ராமு நாடாச்சி எப்போது காலம் சென்றார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது பாட்டி ராமு நாடாச்சி மர்மமான முறையில் காணாமல் போனதால் தான் அவருடைய இறப்பு சான்றிதழ் நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சிக்கு வாரிசு இல்லை என்று கூறி ஏதேனும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சிக்கு வாரிசு இல்லை என்று கூறி ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரியல்ல.

பிவாசாஆ 29 ஆவணம் 1980 ல் மணவாழ்வு பிரிவு ஒப்பந்தம் தான் மணவாழ்க்கை முறிவு ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 29 ஆவணம் எழுதுகையில் நான்

சிறுவன் ஆகையால் எனக்கு நேரடியாக மேற்படி ஆவணம் குறித்து எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. பிவாசாஆ 29 -யை பரிசீலித்த பின்பு தான் எனக்கு 1980 ல் மணவாழ்வு பிரிவு ஒப்பந்தம் ஏற்பட்ட விவரம் தெரியும் என்றால் சரியல்ல. எனது சித்திக்கு திருமணம் 1974 ல் நடந்தது என்றால் சரிதான். ஆகையால் 5 வருடங்களுக்கு பின்பு 1980 ல் பிவாசாஆ 29 க்கான மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

1974 ல் திருமணம் நடந்து பிரிவினை கூறுவதற்கு ஏன் இத்தனை காலம் என்றால் திருமணமான 2,3 மாதங்களிலே பிரிந்துவிட்டு எனது சித்தி எங்களுடன் வாழ்ந்து வந்தார் பின்பு பெரியோர்கள் முன்னிலையில் பேசி எனது சித்திக்கும் செல்லத்துரைக்கும் 1980 ல் நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் அவர்கள் பெற்றோர்கள் முன்னிலையில் விவாக பிரிவு செய்யப்பட்டது. பிவாசாஆ 29 விவாகரத்து என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மணப்பிரிவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மணப்பிரிவிற்கு முன்பே செல்லத்துரை என்பவர் 2 வதாக திருமணம் செய்து கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் மேற்படி விவரத்தை பிவாசாஆ 29-ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 1974 ல் செல்லத்துரை எனது சித்தியை திருமணம் செய்து கொண்டு குழந்தைகள் இல்லாததால் எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சியின் அனுமதியுடன் தமிழ்ச் செல்வி என்பவரை 2-வதாக திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சித்தி சம்மதம் தெரிவிக்கவில்லை.

ஆகையால் பிரதிவாதிகளாக நாங்கள் சூழ்ச்சி செய்து போலியாக பிவாசாஆ 29 யை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. சமூக வழக்கத்தின் படி பிரிவு செய்து வைத்தார்கள். பிவாசாஆ 29 பதிவு செய்த நாளில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லத்துரை மற்றும்

எனது சித்தி வரவில்லை. நாங்கள் ஆள்மாறாட்டம் செய்து மேற்படி பிவாசாஆ 29 யை பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. எங்களின் மரபு வழக்கத்தின் படி சார் பதிவாளர் அலுவலகத்தில் மணமுறிவுஒப்பந்தம் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

மாவட்ட நீதிமன்றம் மூலம் மட்டும் தான் விவாகரத்து செய்யமுடியும் என்றால் சரியல்ல. 1981ல் எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சி 1ம் வாதி கோவிலுக்கு 12 ¼ சென்ட்டை எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 27.01.1981 அன்று எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சி 1ம் வாதி கோவிலுக்கு 12 ¼ சென்ட்டை எழுதி கொடுத்தற்கான ரசீது தான் வாசாஆ 3 என்றால் சரியல்ல. அது போலியான ஆவணம். மேற்படி வாசாஆ 3 யை போலியான ஆவணம் என்று நிரூபிக்க ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள முத்திரையை போலி என்று நிரூபிக்க வேண்டி தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலிருந்து அறிக்கை வாங்கி தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 3 போலியானது என்று எனக்கு பார்த்தவுடனே எனக்கு தெரியும் அதற்கு எனக்கு போதுமான புலமை உள்ளது. வாசாஆ 3 ல் உள்ள கையெழத்து எனது சித்தியின் கையெழுத்து என்று எனக்கு தெரியும் என்று காட்டுவதற்கு என்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாக பத்திரம் ஆவணம் எண் 2915/1974 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் அதில் எனது சித்தியின் கையொப்பமுள்ளது.

நான் தாக்கல் செய்துள்ள பாக பத்திரம் ஆவணம் எண் 2915/1974 அசல் அல்ல நகல் என்றால் சரியல்ல. சான்றிட்ட நகல். மேற்படி சான்றிட்ட நகலில் கையெழுத்து இ,ருக்காது என்றால் சரியல்ல. மேற்படி பாகபத்திர ஆவணத்தில் எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சி ஆங்கிலத்தில் தான் கையொப்பமிட்டுள்ளார் என்றால் எனது சித்தி ஆங்கிலத்திலும்

தமிழிலும் கையொப்பமிடுவது வழக்கம். பாக பத்திர ஆவணத்தில் எந்த மொழியில் எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் இரண்டு மொழியிலும் கையொப்பமிட்டுள்ளார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் அசல் ஆவணத்தை பார்த்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரியல்ல.

பொதுவாக ஒரு ஆவணத்தில் ஏதேனும் ஒரு மொழியில் தான் கையொப்பமிட முடியும். 2 மொழிகளிலும் கையொப்பமிடக் கூடாது என்றால் சரியல்ல. பாக பத்திர ஆவணத்தை பார்த்து தான் வாசாஆ 3 ல் உள்ள கையொப்பம் போலியானது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது சித்தியின் கையெழுத்து எனக்கு தெரியும். 1980 ல் எனக்கு 8 வயது என்றால் சரியல்ல. எனக்கு 15 வயது. மேற்படி பாக பத்திரத்தை தவிர எனது சித்தியின் கையெழுத்தை நிரூபிப்பதற்கு வேறு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது சித்தியின் மணவாழ்வு பிரிவு ஒப்பந்தம் எனது சித்திக்கு தெரியாமல் ஏற்படுத்ததப்பட்டதால் எனது சித்தியின் சொத்தை நாங்கள் அபகரித்து விடுவோம் என்று பயந்து எனது சித்தி 1ம் வாதி கோவில் வகைக்கு 12 ¼ சென்ட் சொத்தினை எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாசாஆ 3 ரசீது எழுதிக் கொடுத்த பின்பு வாதி தரப்பிலிருந்து பதிவு அலுவலகம் சென்று பலமுறை எனது சித்தியிடம் சென்று கேட்டிருக்கிறார்கள் அவரது உடல்நிலை காரணமாக பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணம் தயாரிப்பதற்கு கால தாமதம் ஆனது என்றால் சரியல்ல. ரசீதே போலியான ரீசிது.

1981 முதல் 12 ¼ சென்ட் இடமும் வாதி கோவில் அவகாசத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் எத்தனை சென்ட் சொத்தினை சுற்றி வேலிக் கம்பி அமைத்துள்ளேன் என்றால் 24 சென்ட். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் மொத்த

இடம் 51 சென்ட்டையும் சுற்றி வேலி உள்ளது அதனுள் எனது சொத்தும் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்திற்கு நான் தனியாக முள்வேலி போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். எனது சொத்தின் வடக்கு பக்கம் நான் வேலி போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். நீதிமன்றத்திலிருந்து ஆணையர் நியமிக்கப்பட்டு வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட எனக்கு சம்மதமா என்றால் சம்மதம்.

பிவாசாஆ 23 புகைப்படங்களில் வடக்கு பக்கம் வேலி உள்ளதாக எந்த புகைப்படத்தில் காண்பிக்கப்படுகிறது என்றால் 4 ம் புகைப்படம். நான் எனது இடத்திற்கு மட்டும் தனியாக வேலி போட்டு தனியாக பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணமான கரத்தீர்வை ரசீதுகளில் எனக்கு 24 ½ சென்ட் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. Part என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அப்படியானால் வாதியின் கரத் தீர்வை ரசீதுகளிலும் Part என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது சித்தி நேசபாண்டிய நாடாச்சியின் சொத்தின் மேல் ஆசைப்பட்டு தான் மொத்த சொத்திற்கு உட்பிரிவு செய்யாமல் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அனைத்து சொத்தும் என்னுடையது தான்.

ஐயா வைகுண்டரின் திருவிழாக்கள் 10 நாட்கள் நடைபெறும் என்றால் சரிதான். ஐயா வைகுண்டரின் 9 வது திருவிழா அன்று அனுமார் வாகனத்தில் எழுந்தருளி ஊர்வலமாக செல்வார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி அனுமார் வாகனத்தை கடவுளாக வழிபடுவது வழக்கம் என்றால் சரியல்ல. ஐயா வழி கோவிலில் உருவ வழிபாடு கிடையாது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1994 ல் எனது தாய் நாடாச்சி தங்கம் 3 சென்ட் இடம் செல்லப்ப நாடார் மகன் இராமசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. நான் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் 1994 ல் எனது தாய் நாடாச்சி தங்கம் 3 செண்ட் இடம் செல்லப்ப நாடார் மகன் இராமசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்த ஆவணம் தான் வாசாஆ 5 என்றால் சரியல்ல. எனது தாயாரிடம் இருந்து தவறுதலாக எழுதி வாங்கப்பட்டுள்ளது.

12 ¼ செண்ட்டில் 3 செண்ட் எனது தாய் நாடாச்சி தங்கம் செல்லப்ப நாடார் மகன் இராமசாமி என்பவருக்கு வாசாஆ 5 மூலம் கிரையம் கொடுத்தது போக 9 ¼ செண்ட் தான் எனக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 9 ¼ செண்ட்டுக்கு தான் நான் உரிமையோ அவகாசமோ கோர முடியும் என்றால் சரியல்ல. எனது சித்தி உயிருடன் இருந்த கால கட்டத்தில் எனது சித்தியின் இடத்தை எனது தாயார் எழுதிக் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. எனது தாயார் எழுதிக் கொடுத்த 3 செண்டில் தான் அனுமார் சிலை வைத்து வழிபட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி 3 செண்ட் இடத்தை 2011 ல் செல்லப்பநாடார் மகன் இராமசாமி வாரிசு தாரரிடமிருந்து மேற்படி வாதி கோவில் நிர்வாகம் கிரையம் வாங்கியது என்றால் தவறுதலாக வாங்கியுள்ளார்கள். மேற்படி 3 செண்டு மற்றும் நேச பாண்டிய நாடாச்சியிடமிருந்து வாங்கிய 12 ¼ செண்ட் இடமும் சேர்ந்து மொத்தம் 15 ¼ செண்ட் என்றால் சரியல்ல. மேற்படி 15 ¼ செண்ட் சொத்து எனது சொத்து என்று காண்பிப்பதற்கு எவ்வித ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நேசபாண்டிய நாடாச்சியின் சொத்தான 12 ¼ செண்ட் வாதியின் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் கைவசம் தான் சொத்து உள்ளது.

நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் கடந்த 45 வருடங்களாக அந்த இடத்தில்

கோவில் நிர்வாகம் வருடந்தோறும் திருவிழா பொங்கல் போன்ற பண்டிகைகள் மொத்த ஊர் மக்களுக்காக கோவில் சார்பாக அந்த இடம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. நேசபாண்டிய நாடாச்சியின் உண்மையான வாரிசு அவருடைய கணவர் செல்லத்துரை இறந்த பின்பு அவருடைய வாரிசுதாரர் தான் வருவாரே தவிர எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 2023 ல் நாங்கள் வாதி நேசபாண்டிய நாடாச்சியிடமிருந்து பெற்ற இடத்தில் அத்துமீறி நுழைந்து நாங்கள் இடஞ்சல் செய்ததால் அதற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததால் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணையில் பொய் என்று தெரியவந்து மனு குறைவுபடுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்த வரை நான் அந்நியர் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பட்டிகை சொத்தை எனது என்று காண்பிப்பதற்கு நான் எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பட்டிகை சொத்திற்கு பொருந்தாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**